**சுருக்கம்**

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – பதிவுத்துறை – திரு.C.S.விக்னேஷ் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் நியமனம் செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவுத் (எம்.2)துறை**

**அரசாணை (3D) எண்.7** | **நாள் : 14.06.2023**

**சோபகிருது, வைகாசி -31,**

**திருவள்ளுவர் ஆண்டு, 2054.**

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள் 23.01.2020.
2. பதிவுத்துறை தலைவரின் நடவடிக்கைகள் எண்.43559/கே2/2018-7, நாள் 04.12.2020.
3. பதிவுத்துறை தலைவரின் கடிதம் எண்.41342/கே2/2019, நாள் 11.08.2021 மற்றும் 16.08.2022.

---------

**ஆணை:**

பதிவுத்துறையில், விழுப்புரம் பதிவு மாவட்டம், 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரிந்து 08.06.2019 அன்று பணியிடை மறைந்த திரு.N.T.சுப்ரமணியன் என்பவரின் மனைவி திருமதி.S.காவேரி என்பவர் தனது மூத்த மகன் திரு.C.S.விக்னேஷ் என்பவருக்கு பணிநியமனம் வழங்குமாறும் மற்றும் திரு.C.S.விக்னேஷ் என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வேண்டியும் 06.11.2019 நாளிட்டு அளித்த மனு பரிசீலனை செய்யப்பட்டு, திரு.C.S.விக்னேஷ் என்பவர் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்படுவதற்குரிய கல்வி மற்றும் வயதுத் தகுதிகளை பெற்றிருந்தபடியால், அவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட நடவடிக்கைகளில் பணிநியமனம் செய்து பதிவுத்துறை தலைவரால் ஆணை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, திரு.C.S.விக்னேஷ் 10.12.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து

வருகிறார். திரு.C.S.விக்னேஷ், இளநிலை உதவியாளர் என்பவரின் தற்காலிகப் பணியினை வரன்முறைப்படுத்துவதற்கு பதிவுத்துறை தலைவர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு செயற்குறிப்பினை அனுப்பியுள்ளார்.

2. பதிவுத்துறை தலைவரின் செயற்குறிப்பு அரசால் மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி கூர்ந்தாய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், தமிழ்நாடு அமைச்சுப்பணியில், பதிவுத்துறையில், விழுப்புரம் பதிவு மாவட்டத்தில், கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டுள்ள திரு.C.S.விக்னேஷ் என்பவர் 10.12.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் அப்பணியிடத்திற்குரிய உடற்தகுதியினைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தனியரின் பணியினை வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணி வரன்முறை செய்யப்படுவதால், தனியர், ஆண்டு ஊதிய உயர்வு பெற உரிய விதியின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் அலுவல் சார்பற்ற எண்.3496/ட்டி1/2023, நாள் 26.05.2023 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அலுவல் சார்பற்ற எண்.4838963/ஜி1/2023, நாள் 08.06.2023-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா.ஜோதி நிர்மலாசாமி
அரசு செயலாளர்

பெறுநர்:

பதிவுத்துறைத் தலைவர், சென்னை-28.

திரு.C.S.விக்னேஷ், இளநிலை உதவியாளர்,
விழுப்புரம் பதிவு மாவட்டம்.
(பதிவுத்துறைத் தலைவர், சென்னை-28 வழியாக)

**நகல்:**

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, சென்னை-9.

மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.

இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

14/6/2023.
பிரிவு அலுவலர்

CamScanner

Indl. copy

பதிவுத்துறை தலைவர் அலுவலகம்,
சென்னை-28

மே.எ.எண்.41342/கே2/2019, நாள்.03.07.2023.

அரசாணை (3D) எண்.7. வணிகவரி மற்றும் பதிவு(எம்2)த்துறை, நாள்.14.06.2023 சார்பு செய்யப்படுகிறது.

திரு.C.S.விக்னேஷ், இளநிலை உதவியாளரின் பணிப்பதிவேட்டில் குறிப்புகளை மேற்கொள்ள விழுப்புரம் மாவட்டப்பதிவாளர் கோரப்படுகிறார்.

இத்துடன் தனியரது அசல் சான்றுகள் அனுப்பி வைக்கப்படுகிறது. அவற்றினை பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் அனுப்ப விழுப்புரம் மாவட்டப்பதிவாளர் கோரப்படுகிறார்.

/ஆணையின்படி/

4/7/23
கண்காணிப்பாளர்
4/7/23

பெறுநர்
திரு.C.S.விக்னேஷ், இளநிலை உதவியாளர்.
(விழுப்புரம் மாவட்டப்பதிவாளர் மூலம்)
நகல்
1. மாவட்டப்பதிவாளர், விழுப்புரம்.(கீழ்கண்ட அசல் சான்றுகளுடன்)
   i) மெட்ரிகுலேஷன் பள்ளி இறுதி வகுப்பு சான்று ப.எண்.915742/மார்ச் 2009
   ii) மேல்நிலைப்பள்ளி கல்விச்சான்று ப.எண்.599885/மார்ச் 2011
   iii) Provisional Certificate (M.E. Degree)
   iv) Transfer cum Conduct Certificate
2. கே1 இருக்கையாளர், பதிவுத்துறை தலைவர் அலுவலகம்,
3. முக்கிய ஆணை கோப்பு / தனி நகல் – 1.

CS CamScanner